பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

**NEW MASTER**
INSTITUTE
B. M. C. Lane, JAFFNA.
89 A/L
(Sat, Sun)
HEAT
திரு. வர்ணம்
பிரிவு II
நடைபெறுகிறது.
Sat, Sun: 7.30 a.m.

# உதயன்

விலை ரூ 2/-

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

**NEW MASTER**
INSTITUTE
B.M.C. Lane, JAFFNA.
89 A/L
(Sat, Sun)
BOTANY
சுவாசம்
திரு. குகாதரன்
ஆரம்பம்; 09 - 07 - 88
பிரிவு I: Sat. 6.30 a.m.
பிரிவு II: Sat. 7.30 a.m.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஹு ஆனி மீ 22 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ்தா பிறை 21 ( 06 - 07 - 1988 ) UTHAYAN- A lively Tamil Daily கதிர்: 124

# இணைப்புப் பிரகடனமா? ஆயுத ஒப்படைப்பா?

## எது முதலில் என்பது குறித்து பேச்சுக்களில் இழுபறி நிலை

— கொழும்பிலிருந்து உதயன் சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, ஜுலை 6

வடக்கு- கிழக்கு இணைப்புப் பிரகடனத்தை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன வெளியிடுதல்.

அடையாளமாகவேனும் தமிழீழ விடுதலைப்புலிகள் சிறு தொகுதி ஆயுதங்களை ஒப்படைத்தல்.

இந்த இரண்டில் எது முதலில் நடக்க வேண்டும் என்பதில் இணக்கம் இல்லாமையால் சென்னைப் பேச்சுக்களில் இழுபறிநிலை உருவாகியுள்ளதாம்.

சென்னைத்தகவல்களை மேற்கோள் காட்டி கொழும்பு ஏஜென்ஸி செய்தி ள் இத்தகவலைத் தெரிவித்தன.

''வடக்கு- கிழக்கு இணைப்புக்கான ஜனாதிபதியின் பிரகடனம் முதலில் வெளியிடப்பட வேண்டும். அதன் பின்னரே ஆயுத ஒப்படைப்புப் பற்றிச் சிந்திக்கலாம்'' என தமிழீழ விடுதலைப் புலிகள் வற்புறுத்திவருகிறார்கள்.

விடுதலைப் புலிகளின் இக்கோரிக்கைக்கு இலங்கை ஜனாதிபதியை இணங்கச் செய்ய இந்தியத் தரப்பினர் முயன்று வருகின்றனர். எனினும் இலங்கை அரச வட்டாரங்கள் அதற்கு இணங்குவதாகத் தெரியவில்லை.

'அடையாள ஒப்படைப்பாக' சொற்ப எண்ணிக்கை ஆயுதங்களையேனும் தமிழீழ விடு

(6-ஆம் பக்கம் பார்க்க)

செய்திச் சாரம்

## கிளிநொச்சியில் மூளைக் காய்ச்சல்

### குழந்தை பலி!

யாழ்ப்பாணம், ஜுலை. 6

மூளைக் காய்ச்சல் காரணமாக கிளிநொச்சியில் குழந்தை ஒன்று மரணமாகியது.

கிளிநொச்சியைச் சேர்ந்த ஆர். ரூபன் (வயது 2) என்ற குழந்தையே இந்நோய்க்கு ஆளாகி மரணமடைந்தது.

மேலும் சில குழந்தைகளுக்கு மூளைக் காய்ச்சல் நோய் அறிகுறி இருப்பதாகவும் வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-10)

## இளைஞர் மன்றம் மட்டக்களப்பிலும் இடை நிறுத்தம்

மட்டக்களப்பு ஜுலை 6

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நடவடிக்கைகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளால் தடை விதிக்கப்பட்டுள்ளதை அடுத்து மட்டக்களப்பு மாவட்டத்திலும் இம்மன்ற அலுவல்கள் யாவும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. (ஓ-21)

## நேற்று அது அவுட்!

யாழ். பிரதம தபால் நிலையத் தொலைபேசி நேற்றுக்காலை முதல் இயங்கவில்லை.

இதேவேளை யாழ்நகரின் ஏனைய இடங்களில் உள்ள தொலைபேசிகளும் ஒழுங்காக செயற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ - க)

## முருங்கனில் 2 சடலங்கள்

வவுனியா, ஜுலை 6

கடந்த திங்களன்று காலை முருங்கன் சந்தியில் இரண்டு இளைஞர்களின் சடலங்கள் கிடந்தது கண்டு பிடிக்கப்பட்டு அங்குள்ள இந்திய அமைதிப் படையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் மன்னார்ப்பகுதி ஈ. பி, ஆர். எல். எவ் இயக்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்களானயோகராஜா, ஜொலி என்பவர்களின் சடலங்களே அவைஎன்று அடையாளம் காணப்பட்டுள்ளது. [ஓ-164]

## ஆலங்கேணியில் மறியற்போர்

திருகோணமலை, ஜுலை. 6

ஆலங்கேணி கிராமத்தைச் சேர்ந்த மக்கள் கடந்த 30 ஆம் திகதி மறியல் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

பெரும் திரளான மக்கள் கலந்துகொண்ட இந்த மறியல் போராட்டத்தின் பின்பு அமைதிப்படையினரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி, பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு சமாதானம் உருவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றே மேற்படி மறியற்போராட்டம் நடத்தப்பட்டது. (ஓ-150)

## யாழ். நகரில் கறுப்புக்கொடி

குருநகர், ஜுலை. 6

'கரும்புலி' கப்டன் மில்லரின் ஓராண்டு நினைவை ஒட்டி நேற்று யாழ். நகரின் குறிப்பிட்ட சில பகுதிகளில் வீதிகள் தோறும் தோரணங்களும், அஞ்சலி வாசகங்கள் எழுதப்பட்ட கறுப்புக்கொடிகளும் பறக்க விடப்பட்டிருந்தன. (ஓ-51)

## வடமராட்சி கிழக்கில் பலத்த சோதனை

குருநகர், ஜுலை 6

நேற்று அதிகாலையில் இருந்தே வடமராட்சி கிழக்கில் சில கிராமங்களில் உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கு அமுல் செய்யப்பட்டு சோதனை நடத்தப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு தாளையடிப் பகுதியில் நடைபெற்ற சம்பவம் ஒன்றை அடுத்தே சோதனை நடவடிக்கையில் அமைதிப் படையினர் ஈடுபடுத்தப்பட்டனர்.

இதனால் வடமராட்சி கிழக்கில் இருந்து ஏனைய பகுதிகளுக்கும் வடமராட்சி கிழக்கிற்கு ஏனைய பகுதிகளில் இருந்தும் போக்குவரத்துகள் நேற்று நடைபெறவில்லை. (ஓ - 51)

## திக்வலையில் மூவர் பலி!

கொழும்பு, ஜுலை 6

தென் மாகாணத்தில் மாத்தறைக்கு அருகில் உள்ள திக்வலைப் பகுதியில் நேற்று மூன்றுபேர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

'ஷப்ரு' ஆதரவில்
ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம்
நடத்தும்
'ஷப்ரு' சுற்றுக்கிண்ணத்துக்கான
மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்
கிரிக்கெட் போட்டி
விவரங்கள் நாளைய உதயனில்

## காத்தான்குடியில் அமைதிப்படையினரின் அநாவசிய நடமாட்டம் இல்லை

மட்டக்களப்பு ஜுலை 6

காத்தான்குடியில் இந்திய அமைதிப் படையினரின் அநாவசியமான வெளிநடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அமைதிப்படை இணைப்பதிகாரி பிரிகேடியர் ஐ. எம். நார் இதற்கான உத்தரவை விடுத்துள்ளார்.

இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதை அடுத்து கடைத்தெரு உட்பட நகரச் சுற்றுடலில் அமைதிப் படையினர் நடமாட்டத்தைக்காண முடியவில்லை.

இராணுவ பொலீஸ் ஜீப் மட்டும் ஐந்து ஜவான்கள் சகிதம் நகரில் நிறுத்தப்பட்டுள்ளது. நகரக் கண்காணிப்பில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர். (ஓ-21)

## கரும்புலி மில்லர் நினைவுதினம்:

# வடமராட்சியில் பூரண துக்க தினம்

வடமராட்சி ஜுலை 6

கரும்புலி கப்டன் மில்லரின் ஓராண்டு நினைவு தினத்தை ஒட்டி நேற்று வடமராட்சியில் பூரண துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

சமய நிகழ்ச்சிகளும், இரத்ததானம் செய்யும் நிகழ்ச்சிகளும் பல இடங்களில் நடைபெற்றன

வல்வெட்டித் துறை, பருத்தித்துறை முதலிய இடங்களில் வீதிகள் தோறும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. வாகனங்களிலும் கறுப்புக் கொடிகள் பறந்தன

விசேட ஜீ. சி. ஈ பரீட்சையில் தோற்றிய மாணவர்கள் கறுப்புப்பட்டி அணிந்து பரீட்சை எழுதினர்.

பெரும்பாலான கடைகள் பூட்டப்பட்டிருந்தன.

வீதிதோறும் உயிர் நீத்த போராளிகளின் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

ஆங்காங்கே சோக இசைகள் ஒலிபரப்பாகின. (உ-க-160)

## பூவரசங்குளத்தில் தேடுதல்

கொழும்பு, ஜுலை 6

வவுனியா, பூவரசங்குளம் பகுதியில் இந்திய அமைதிப்படையினர் நேற்றுத் தேடுதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையில் 11 சிவிலியன்கள் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது. வவுனியா ஆஸ்பத்திரியிலும் மற்றும் மருத்துவ மனைகளிலும் காயமடைந்தவர்கள் அனுமதிக்கப்பட்டனர். (ஓ-உ-எ)

## முச்சந்தி முரளி



என்னத்தைச் சொன்னாலும் கசிப்பு, வெட்டிரும்புகளின் அநியாயத்தைப் போக்க முடியாது போலிருக்கே! பெண்களும் எல்லோ அதுகளைக் குடிக்க போட்டி போடுறினம்!!

## கசிப்பு அருந்தி 8 பேர் பலி!

வவுனியா, ஜுலை 6

கசிப்பு அருந்திய மூன்று பெண்கள் உட்பட எட்டுப்பேர் மரணமடைந்துள்ளனர்.

கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை இரவு மடுமாதா கோவில் உற்சவத்திற்கு அங்கு சென்றவர்களே கசிப்பு அருந்தி மரணமானார்கள். மடு கோவில், வவுனியா, சூசைப்பிள்ளை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆசிரியர்களுக்கு ஆகஸ்ட்சம்பளத்துடன் நிலுவைகளும் கிடைக்கும்

சம்பளம் உயர்த்தப்பட்டுள்ள யாழ். மாவட்ட ஆசிரியர்கள் சகலருக்கும் எதிர்வரும் ஆகஸ்ட் மாதச் சம்பளத்துடன் நிலுவைகள் யாவும் கொடுக்கப்படும்,

இத்தகவலை பிரதம கல்வியதிகாரி திரு. ரே. சோமசுந்தரம் தெரிவித்தார்.

அமைச்சின் 387 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் பிரகாரம் அண்மையில் பிறிதொரு சம்பள உயர்வு யாழ். மாவட்டத்தில் கடமை புரியும் 80 சத வீத ஆசிரியர்களுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். [ஓ-6]

# வவுனியாவில் சாத்வீகப் போராட்டம்

## அடகு நகை மீளளிக்கக் கோரி

வவுனியா, ஜுலை 6

வவுனியா மாவட்ட மக்களின் அடகு நகைகளை மீளளிக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரி நேற்று வவுனியா மாவட்ட விவசாயிகள் சங்கமும், வவுனியா நகை அடகு வைத்தோர் சங்கமும் இணைந்து வவுனியா மக்கள் வங்கியின் முன்னால் அமைதியானமுறையில் அமர்ந்து சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபட்டன.

ஆண்களும் பெண்களும் இளைஞர்களுமாக நூற்றுக்கணக்கானோர் இம்மறியல் போராட்டத்தில் கலந்து கொண்

( 6-ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் மக்கள் திங்கள் நடத்திய போராட்டம்

யாழ்ப்பாணம், ஜுலை 6

பேச்சுவார்த்தை, யுத்தநிறுத்தம் என்பவற்றை வலியுறுத்தி மன்னாரில் பொதுமக்கள் எழுச்சிப் போராட்டம் ஒன்றை நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடத்தினர்.

திங்கட்கிழமை காலை 6மணி முதல் நூற்றுக்கணக்கான வாகனங்கள் மன்னார் பஸ்நிலையத்தின் முன்னால் கொண்டுவந்து நிறுத்தப்பட்டன.

நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை, யுத்த நிறுத்தம், எமது வாகனங்களை இராணுவ நடவடிக்கைகளுக்கு பாவியாதே போன்ற வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகள் வாகனங்களில் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன.

வாகனங்கள் எதுவுமே நீண்ட தூர குறுகியதூர

(6-ஆம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

06 - 07 - 1988
ஆனி 22
புதன்கிழமை
சுபநேரம்:
04-28 முதல் 05-58 வரை
ராகுகாலம்:
11-58 முதல் 01-28 வரை

## பணம் சேகரிப்போர் குறித்து விழிப்பாக இருக்கக் கூறுகிறது புளொட்

யாழ்ப்பாணம், ஜுலை6

தமது பெயரைப்பயன்படுத்தி பணம் சேகரிப்பதில் ஈடுபட்டுள்ள தீய சக்திகள் குறித்து விழிப்பாக இருக்குமாறு தமிழ் ஈழமக்கள் விடுதலைக் கழகம், (புளொட்-யாழ் பிராந்தியம்) விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

தமிழ் ஈழமக்கள் விடுதலைக் கழகத்தின் பெயரைப் பயன்படுத்தி சில தீய சக்திகள் பணம் சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளன என அறிகிறோம். இதற்கு பிற சக்திகள் உதவி புரிந்து வருகின்றன.

இவ்வாறான சமூக

(6-ஆம் பக்கம் பார்க்க)

## சார்ஜண்ட் இருவர் சுட்டுக் கொலை

தென் இலங்கையில் இரண்டு பொலீஸ் சார்ஜண்ட்டுகள் கடந்த திங்கட்கிழமை இனந்தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அவிசாவலை பொலீஸ் நிலைய சார்ஜண்ட் தர்மசேன, தும்மோதரையிலும்—

மற்றைய சார்ஜண்ட்டான சரத் தர்மதாஸ பேராதனையில் அவரது வீட்டில் வைத்தும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

## சட்டத் திருத்தம் நிறைவேறியது

பொதுசன பாதுகாப்புச் சட்டத் திருத்தம் நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஆதரவாக 40 எம். பிக்கள் வாக்களித்தனர் சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, கம்யூனிஸ்ட்கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த 5 எம் பிக்கள் எதிராக வாக்களித்தனர். விவாத முடிவில் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் வின்சன்ட் பெரேரா பேசினார். (ஓ-எ)

## நேர்முகப்பரீட்சை

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து ரிசேர்வ் பொலீஸ் கான்ஸ்டபிள், சப் இன்ஸ்பெக்டர் பதவிகளுக்கு விண்ணப்பம் செய்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 12 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை கொழும்பு தலைமையகத்தில் நடைபெறும்.

## விடுதலைப்புலிகள் உரிமை

வவுனியா, ஜுலை. 6

கடந்த மாதம் 26 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் 5 இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டமைக்கு உரிமை கோரி வவுனியா மாவட்ட விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் ந. தினேஷ் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பகுதியில் கொலை, கொள்ளை,

(6-ஆம் பக்கம் பார்க்க)

சேவ்ரி ரவல்ஸ்
நீடிப்புச் சேவை
எமது வழமையான நீடிப்புச் சேவை 6-7-1988 இன்று முதல் "பண்டத்தரிப்பு" வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.
பண்டத்தரிப்பில் ஆசனம் பதியும் இடம்:
கி. சுந்தரம்பிள்ளை
நியூஸ் ஏஜென்ட்,
சைவானந்த கிளப்
பிரதான வீதி,
பண்டத்தரிப்பு.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ✶சின்னஞ் சிறு விளம்பரம்✶

## விற்பனைக்கு

நாஷனல் JVC Akai வீடியோ டெக்கிற்கான மோட்டர், வீடியோ செட் பெல்ற், ICகள் சகல ரெலிவிஷன்களில் Flybach ரியூனர் ரியூப் மற்றைய உதிரிப்பாகங்களும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். ஓடர்களுக்கு சிங்கப்பூரில் இருந்து பெற்றுக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு Jaffna Technical Institute Stanly Road [ரெயில்வே கடவை அருகே] (C/5570)

Prima Lohmann வெள்ளை, சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் சிவப்பு சேவல் குஞ்சுகள் Hy-Line வெள்ளை கறுப்புப் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன் கூட்டியே பதிவு செய்யவும் Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர் (C5626)

பிறவுண் சேவற்குஞ்சுகள் 6ஆம் திகதி புதன்கிழமையும் புறொயிலர் குஞ்சுகள் (Broiler Chicks) 15ம் திகதி வெள்ளிக்கிழமையும் 16ம் திகதி சனிக்கிழமையும் விநியோகிக்கப்படும். பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி கொக்குவில். (4886)

GOLDI Sausages எல்லாவகையான Saubages மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு கழிவு தரப்படும். Nallur Farm Centre C/O நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர். (சி5624)

புதிய Reconditioned Honda புதிய பழைய Model C.50, C.90, C.D-90 MB 5 மோட்டார் சைக்கிள்கள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு No 16 Kandy Road, Jaffna (உதவி அரசாங்கஅதிபர் பணிமனை முன்பாக) (5782)

அதிகம் பாவிக்கப்படாத நல்ல நிலையிலுள்ள அமெரிக்கத் தயாரிப்பான 24 அங்குல ''பேப்பர் கட்டர்'', விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 7 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (5783)

### காணி விற்பனை

அளவெட்டி அலுக்ஸைச் சந்திக்கு அருகாமையில் 3 பரப்புக்காணி (மண்வீடு, 15 தென்னை, 5 மாமரங்கள்) விற்பனைக்கு உண்டு. சகல வசதி கொண்டது. தொடர்பு விலாசம் K. சிவசுப்பிரமணியம், நீதிமன்ற ஒழுங்கை, மல்லாகம். (4894)

### காணி விற்பனை

காரைநகர் ஆயிலி பிரதானவீதி முனியப்பர் கோவிலுக்கு அருகாமையில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு குறிஞ்சி பார்மஸி& குரோசறி திருநெல்வேலி. (4899)

### கோழிக் குஞ்சு விநியோகம்

பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் புரோயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் விநியோகிக்கப்படும். சற்குணராஜா&பிறதர்ஸ் பிரம்படிலேன் கொக்குவில். மயூராபாம் விற்பனை நிலயம் முன்பாக சாவகச்சேரி, மகேஸ்வரி ஹோட்டல் முன்பாக சரடிப் போக்கு பாலத்தடி, கிளிநொச்சி. (4885)

## விற்பனைக்கு

மோட்டார் கார் விற்பனை

நல்லநிலையில் உள்ள Morris Ox ford மோட்டார் கார் விற்பனைக்கு உண்டு. காலை 7 முதல் 8வரை; மாலை 5 முதல் 6 மணிவரை பார்வையிடலாம் J. S. M. சாமுவேல், காங்கேசன்துறை வீதி, தெல்லிப்பளை. (4883)

### இறைச்சி கோழி விற்பனை

Broiler இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும் Nallur Farm Centre C/O நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர். (சி 5625)

### தவறிவிட்டது

பலாலி றோட்டில் திருநெல்வேலி சந்தைப் பகுதியில் எனது மூக்குக் கண்ணாடி தவறிவிட்டது கண்டு எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். அல்லது 875, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் (யுவானியார் ஆலயம்முன்பாக) ஒப்படைக்கவும். (4895)

எனது அடையாள அட்டை இல.430032054 கச்சேரியடியில் விபத்தின் போது தொலைந்து விட்டது. தயவுசெய்து கண்டெடுத்தோர் கீழ்க் கண்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். சி நடராசா, 68 (22) கனகரத்தினம் றோட், அரியாலை. (5784)

### பாடல் பதிவு செய்தல்

நீங்கள் விரும்பும் மதுரகான பாடல்களை நவீன எலக்ரோனிக் ஈக்குவலைசர் மூலம் ஸ்ரீறியோ முறையில் பதிவு செய்து கொள்ளவும் நாற்பதினாயிரத்திற்கு மேற்பட்ட மிக பழைய புதிய பாடல்களைத் தெரிவு செய்து கொள்ளவும், நாடுங்கள்: விக்டர் அன் சன்ஸ் 100, ஸ்ரான்லி வீதி, விக்ரேஸ் மியூசிக் சென்ரர் 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குழி, விக்டர் அன் சன்ஸ் 81, ஸ்ரேசன் வீதி, சுன்னாகம். (C.5596)

### திருத்திக் கொடுக்கப்படும்

சகலவிதமான றேடியோ, வீடியோ டெக், T. V. மின்விசிறிகள், மின் அடுப்புக்கள், மின்மோட்டர்கள், றைஸ் குக்கர், சுவீற், மொலினெக்ஸ் கிரைண்டர்கள், எலக்ரோனிக் கல்குலேற்றர், சுவர் மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள நாடுங்கள். விக்டர் அன் சன்ஸ் (விக்ரேஸ்) 100 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். C/5594

### TYPE WRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக்கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road, Jaffna, Samy & Co Shabra அருகாமையில். (C5300)

### புதிய A/L வகுப்பு

A/L ''90'' மாணவர்களுக்கு கலை வர்த்தக பாடங்கள் மட்டும் ஆரம்பம்: 11- 07- 1988 பி.ப. 3 மணி Modern Education Center Karaveddy. (4893)

## தேவை

யாழ் நகரில் மின்சார பொருட்கள் விற்பனை செய்யும் நிலயத்திற்கு விற்பனை உதவியாளர்கள் தேவை. வயதெல்லை 18 – 25 முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. C/o26 5, உதயன் யாழ்ப்பாணம். (4892)

### மணமகள் தேவை

வெளிநாடு ஒன்றில் கௌரவமான தொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை. வெளிநாட்டில் இருப்பவர்களும், விண்ணப்பிக்கலாம். வெளிநாடு செல்ல இருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்: 460, ஆஸ்பத்திரி வீதி (நிக்கோ ரேடேஸ்) யாழ்ப்பாணம்: (4896)

### வான் றைவர் தேவை

விற்பனை வாகனத்திற்கு அனுபவம்வாய்ந்த ஓட்டுனர் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகளுடன் வைற் பீல்ட்இன்டஸ்ரீஸ் வல்லை றோட், சங்கானை என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். (C/5648)

### பணிப்பெண் தேவை

நான்கு சிறுபிள்ளைகளை பராமரிக்கவும், வீட்டு வேலை செய்வதற்கும் 12 வயதுமுதல் 35 வயதுக்கு இடையிலான பணிப்பெண் தேவை. அனாதைகள் உதவியற்றவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் அதிகம் கொடுக்கப்படும் தொடர்புவிலாசம் 1, இரத்தினமாளிகை, 57, கன்னாதிட்டி யாழ்ப்பாணம் - (2) பேபி அஞ்சல வீதி, வல்வெட்டித்துறை. (4897)

### தவறிவிட்டது

Miss V. பாலபரமேஸ்வரி ஆகிய எனது இன்சூரன்ஸ் பொலிசி இல. 800791 1-4-88 அன்று காலை கிளிநொச்சியில் இருந்து யாழ்வந்த மினிபஸ்சில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தந்து உதவவும். விலாசம் D. 7. இந்து மகாவித்தியாலயம் கிளிநொச்சி அல்லது உதயன் யாழ்ப்பாணம். சன்மானம் வழங்கப்படும். (4898)

### புவியியல் நூல்கள்

A/L வகுப்புக்குரிய அபிவிருத்திப் புவியியல் எறியங்கள் இரண்டினதும் புதிய பதிப்புகள் வெளிவந்துள்ளன, ஆக்கியோன் க. குணராசா பிரபல புத்தகசாலைகளில் பெறலாம். இலங்கைப் புவியியல் விரைவில் வெளிவரும். (1580)

### பிறந்த நாள்வாழ்த்து

தெல்லிப்பளை மாறுத்தலைவிளான் நாகமணி பரிமளபுஸ்பம் தம்பதிகளின் புதல்வன் பாலதீபன் 10 வது பிறந்த தினத்தை இன்று கொண்டாடுகிறார். பாலதீபனை அப்பா, அம்மா, அண்ணா அக்காமார், அம்மம்மாமார் உற்றார் உறவினருடன் கிருபாகரசூரியன்-சசிந்திரா தம்பதிகளும் வாழ்த்துகின்றார்கள். (C/5663)

## வேண்டுகோள்

லண்டன் ஜூலை 5

வளைகுடாவில் இருந்து வேற்றுநாட்டுப் போர்க் கப்பல்கள் வெளியேற்றப்படவேண்டும் என்று ஐ.நாவுக்குவேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வளைகுடா யுத்தத்தை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும் என்றும் சோவியத் யூனியன் உட்பட வளைகுடாநாடுகள் சில இந்த வேண்டுகோளை விடுத்துள்ளன. (ஏ)

---

நல்லை ஆதீனமும்
''பல்லவி'' சஞ்சிகை நிர்வாகமும்
உதயன் - சஞ்சீவி ஆதரவில் நடத்தும்

## தம்புரா பரிசு - இசைப்போட்டி 1988 - 1989

**பாடத்திட்டம்:**

''பல்லவி'' 2 வது வெளியீடு – ஆடி இதழிலே ''தம்புரா பரிசு – இசைப்போட்டி''க்கான பாடத்திட்டம் வெளியாகும்.

**தகைமைகள்:**

I. தம்புரா பரிசு இசைப்போட்டியிற் கலந்து கொள்பவர்கள் வட இலங்கைச் சங்கீத சபையால் நடத்தப்படும் ஆசிரியர் தராதரப்பத்திரம் அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக டிப்புளோமாப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

II. போட்டியாளர்கள் 01- 11- 1988 அன்று 30 வயதிற்கு மேற்படாதவர்களாயிருத்தல் வேண்டும்.

III. முதலாம், இரண்டாம், மூன்றாமிடங்களைப் பெறுபவர்களை இந்தியாவிலிருந்து வரும் நடுவர் தலைமையிலான குழு தெரிவு செய்யும். முதல் தெரிவுப் போட்டிகள் 1988 கார்த்திகை மாதம் நடைபெறும். முதல் தெரிவில் பதின்மர் தெரிவாவர். நடுவர் தீர்ப்பே இறுதியானது.

IV. விண்ணப்ப முடிவுத் திகதி:- 30– 09– 1988.

V. பின்வரும் முகவரிகளிலே விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

நல்லை ஆதீனம், நல்லூர்,
'பல்லவி அலுவலகம்' 167, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

S. குணராஜா
கனகசபாபதி நாகேஸ்வரன், B. A(Hons), M. A (Cey)
போட்டி அமைப்பாளர்கள்

(C 5687)

---

## ஹோம் ரினன்ஸ் யாழ். கிளை பணவைப்பாளர் சங்கம்

### பொதுக்கூட்டம்

இடம்:- வைத்தீஸ்வர வித்தியாசாலை மண்டபம்

காலம்:- ஞாயிற்றுக்கிழமை 10-7-88 காலை 10-00 மணி

விடயம் (1) கொழும்பு மாவட்ட நீதிமன்ற வழக்கு இல 2863/ விசேடம் சம்பந்தமான விளக்கம்.

(2) வேறு விடயங்கள்.

குறிப்பு:- இதுவரையும் அங்கத்தவர்களாகச் சேராதவர்கள், அவர்களின் நன்மை கருதி உடனடியாக அங்கத்தவர்களாகச் சேரவும்.

சபை ஏகமனதாக தீர்மானித்த வழக்குக்கான செலவுப் பணத்தை தாமதமின்றி தனாதிகாரியிடம் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெறவும்.

ஆ. பாலகிருஷ்ணன்
செயலாளர்

(5180)

---

## அமெரிக்கத் தீவில் உடனடி வேலை வாய்ப்புக்கள்

மேசன்மார் (Masons)
தச்சுத் தொழிலாளர் (Carpentors)
கட்டிட இரும்பு வளைப்போர் (Bar Benders)

தகுதியுடையோர் நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

எஸ். குலம்
பெரிய பளை,
பளை.

(5159)

---

# NEW MASTER INSTITUTE

B. M. C. LANE, JAFFNA.

## 90 A/L

### WEEKEND CLASSES

Chemistry - 7-30 a.m.
Physics - 8-30 a.m.
Botany - 9-30 a.m.
Zoology - 10-30 a.m.
Pure Maths- 9-30 a.m.
Applied ,, - 10-30 a.m.

(எமது வழமையான ஆசிரியர் குழு)

ஆரம்பம் :

**10-07-88 Sunday**

(C/5665)

---

வைக்கோல் நல்ல பசளை

கொழும்பு, ஜூலை 6

நெற்செய்கைக்குவைக்கோல் நல்ல பசளையாக அமையும் என்று விஞ்ஞானிகள் குழு ஒன்று அறிவித்துள்ளது.

பொட்டாஷ் தொடர்பான பசளைகளுக்குமாற்றாக வைக்கோல் இருப்பதாக விவசாய அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஓ-எ)

## விளையாட்டு விழா

சரவணை, ஜூலை6

சரவணை திருவள்ளுவர் சனசமூகநிலையத்தின் 30ஆவதுஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு சரவணை திருவள்ளுவர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினதும் விளையாட்டுக் கழகத்தினதும் 9ஆவது ஆண்டு விளையாட்டுவிழா நடைபெற உள்ளது. (சி)

## சந்திரபுர ஸ்கந்தவரோதய முதலிடம்

சாவகச்சேரி, ஜூலை 6

மட்டுவில் கொத்தணிப் பாடசாலைகளின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் அண்மையில் ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன.

பதினொரு பாடசாலை மாணவர்கள் நான்கு இல்லங்களாக போட்டிகளில் பங்கு பற்றினர்.

கொத்தணி அதிபர் திரு. ஆ. செல்லையா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கல்வி அதிகாரி திரு. அ. தங்கராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

மஞ்சள் இல்லம் முதலாவது இடத்தையும் சிவப்பு, நீல இல்லங்கள் முறையே 2ஆம், 3 ஆம் இடங்களையும் பெற்றன.

விளையாட்டுக்களில் எட்டு முதல் இடங்களைப் பெற்ற சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம் சாம்பியனானது. (சி-31)

### 2ஆம் இடம்

திருகோணமலை ஜூலை 6

அகில இலங்கை ரீதியில் நடந்த '-ம்உதாவ' கட்டுரைப் போட்டியில் திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வர வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் ரவீந்திரன் ரவிசரோசன் இரண்டாம் இடத்தைப் பெற்றார். (இ-150)

---

## அன்பர் க. கந்தசாமியை விடுவிக்க கோருகிறது

நியூ ஈரா பப்ளிக்கேஷன் லிமிட்டெட்
(New Era Publications Ltd)

நியூ ஈரா பப்ளிக்கேஷன் லிமிட்டெட்டின் Subscribers, Governors ஆகியவர்களில் ஒருவரும், அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் Subscribers ஆகியவர்களில் ஒருவரும் தமிழ்மக்களின் பிரச்சினைகளைச் சர்வதேச மட்டத்தில் குரல் கொடுக்கும் ''சற்றடே றிவியூ'' (Saturday Review) பிரசுரிப்பாளரில் ஒருவரும், மற்றும் தமிழ் மக்கள் நலனில் அதிக அக்கறை உள்ளவருமாகிய அன்பர் க. கந்தசாமியை உடனே விடுவித்து உதவுமாறு நியூ ஈரா பப்ளிக்கேஷன் லிமிட்டெட் சம்பந்தப்பட்டோரை பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறது.

அன்பர், தமிழ்மக்கள் புனர்வாழ்வு நடவடிக்கையில் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக செயற்பட்டு வந்தவர். அத்துடன் அவர் இருதய கோளாறுடையவர். அவர் கடந்த 19-6-88 அன்று கடத்தப்பட்டமை தமிழ்மக்கள் அனைவருக்குமே பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் தரும் செயலாக அமைந்துள்ளது. எக்காரணத்துக்காக அவர் கடத்தப்பட்டிருந்தாலும் தமிழ் மக்களின் நன்மைகளைக் கருத்திற்கொண்டு, அவரை உடனே விடுவித்து உதவுமாறு தமிழ்பேசும் அனைத்து மக்கள் சார்பாகவும், நியூ ஈரா பப்ளிக்கேஷன் லிமிட்டெட், மீண்டும் கேட்டுக்கொள்கிறது.

(5185)

---

## Sales Representative

A Colombo based Company wishes to recruit suitable Candidates as Sales Representative to promote sales of their Office Appliances and Steel product manufacture in Jaffna Preference will be given to those who are proficient in Typewrting and who can read, write and Speak English well. Applicants should be between 20 and 25 years of age.

Apply on or before 11th July. 1988.

The Advertiser.
No 262, C/o Uthayan.

(C-5615)

---

## வேகமாக விற்பனையாகின்றன

1987 முதல் நடைமுறைப்படுத்தப்படும் புதியபாடத் திட்டத்திற்கமைந்த ஆண்டு 6, 7க்குரிய

### புதிய கணிதப் பயிற்சி

(அஸ்ரன் பதிப்பக வெளியீடு)

100 பல்தேர்வு வினாக்களையும் 5 மாதிரி வினாத்தாள்களையும் உள்ளடக்கியது. 6ஆம், 7ஆம் ஆண்டு மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டி

கிடைக்குமிடங்கள்:- பூபாலசிங்கம் புத்தகசாலை, ஸ்ரீலங்கா புத்தகசாலை, ஸ்ரீசுப்பிரமணியம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (C-5666)

---

உ
ஸ்ரீராமஜயம்

## விவாஹ சுபமுகூர்த்தப் பத்திரிகை

அன்புடையீர்,

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் விபவ வருஷம் ஆனி மாதம் 22 ஆம் திகதி (6-7-88) இன்று புதன்கிழமை சப்தமி திதியும், உத்தரட்டாதி நக்ஷத்திரமும் சித்த யோகமும் சுபஹோரையுங்கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 7-15 மணி முதல் 8-30 மணிக்குள் வரும் கடகலக்ன சுபமுகூர்த்தத்தில்

எமது கனிஷ்ட புத்திரி சௌபாக்கியவதி **சரஸ்வதிதேவியை** ★ எமது கனிஷ்ட புத்திரன் சிரஞ்சீவி **ராஜகோபால சர்மாவுக்கு**

கன்னிகாதானம்செய்து, மாங்கல்ய தாரணம் செய்வதாய் ஸ்ரீ விநாயகப் பெருமானின் கிருபையை முன்னிட்டு, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் குருவருளுடன் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு ஷை முகூர்த்தம் 33, கடைச்சாமி கோவில் வீதி, நடேசர் கோவில் 'தாரிணி பவனத்'தில் நடைபெறுவதால் தாங்கள் இஷ்ட மித்ர பந்துக்களுடன் வந்திருந்து சுபமுகூர்த்தத்தை நடாத்தி வைத்து தம்பதிகளை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சுபம்

சமாவர்த்தனம்,- 6-7-88 அதிகாலை 4-00 மணிக்குமேல் மணமகனின் இல்லத்தில் நடைபெறும்.

வரவேற்புபசாரம்:- மணமகனில்லத்தில் 7-7-88 வியாழக்கிழமை பகல் 12-00 மணிக்குமேல் 6-00 மணிவரை நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

ஸ்ரீமான் - ஸ்ரீமதி **கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்** — ஸ்ரீமான் - ஸ்ரீமதி **வை. மு. பரமசாமிக்குருக்கள்**

வரவேற்பாளர்கள்

ஸ்ரீமான் - ஸ்ரீமதி **K. K. கோபாலன்**
''தாரிணி பவனம்''
33, கடைச்சாமி கோவில் வீதி,
நடேசர் கோவில், நீராவியடி.

ஸ்ரீமான் - ஸ்ரீமதி **ப. முத்துக்குமாரசாமிக் குருக்களும் சகோதரர்களும்**
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(இருவீட்டார் அழைப்பு) (5768)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுப்பரிசு

யாழ்ப்பாணம் ஜூலை- 6

''சாத்தவராயன் நாடகம்'' நூலின் பதிப்பாசிரியர் கலாநிதி இ.பாலசுந்தரத்துக்கு 500 ரூபா நினைவுப்பரிசொன்றை அளிக்க கொழும்பு தமிழ்ச்சங்கம் தீர்மானித்துள்ளது.

கொழும்புத் தமிழ்ச் சங்கம் பிரஸ்தாப நாடக இலக்கியம் காவிய அமைப்புப் பெற்று நிலைத்து நிலவ வழிவகுத்த யாழ். மாவட்ட கலாசார பேரவையைப் பாராட்டியுள்ளது.

கலாநிதி பாலசுந்தரம் யாழ். பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த10 மாதகாலமாக

## இயங்க முடியாத நிலையில் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்

புதுக்குடியிருப்பு, ஜூலை 6

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம் கடந்த 10 மாதங்களாகச் செயலிழந்துள்ளது.

மாணவர்கள் பலர் அகதிகளாக பிறமாவட்டங்களில் கல்வி பயின்று வருகின்றனர். ஒரு பகுதி மாணவர்கள் புதுக்குடியிருப்பில் உள்ள தேவாலயத்தில் ஒரு பகுதியில் கல்வி பயின்று வருகின்றனர்.

அமைதிப்படையினரின் இராணுவ நடவடிக்கைகள் புதுக்குடியிருப்பில் மேற்கொள்ளப்பட்டபோது புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் இராணுவத்தினர் நிலைகொண்டனர்.

அண்மைக் காலச் சம்பவங்களால் மகா வித்தியாலயத்தின் கட்டடமும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொடர்ந்தும் இராணுவத்தினர் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்திலே முகாம் அமைந்துள்ளதால் 10 மாதங்களாக இப் பாடசாலை இயங்க முடியாமல் உள்ளது.

(இ-126)

பண்டிதர் கொலை

## 100 பேர் விசாரணையில்

கொழும்பு, ஜூலை 6

சம்யுனிஸ்ட் கட்சித் தொழிற்சங்கத் தலைவர் எல். டபிள்யு பண்டிதவின் கொலைச் சம்பவம் தொடர்பாக தெமட்டகொட பொலீஸாரினால் சுமார் நூறு பேர் விசாரணை செய்யப்பட்டனர்.

## ஹிட்லரின் வாழ்க்கை முறையையும் நாம் அறிந்திருக்க வேண்டும்

காங்கேசன் துறை, ஜூலை, 6

நமக்கு முன்னோடிகளாகத் திகழ்ந்த பெரியார்களைப் பற்றி நாம் அறிந்து அவர்களின் கோட்பாடுகள், நல்வழிகளைப் பின்பற்றி நடக்க வேண்டும். காந்தி, நேரு, ஆபிரகாம் லிங்கன் போன்றவர்களின் வாழ்க்கையை படிக்கும் போது ஹிட்லரின் வாழ்க்கை முறையையும் படிக்கவேண்டும். நல்லவற்றை தெரிந்து எடுத்து கூடாதவற்றை விலக்கிக்கொள்ள வேண்டும்.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி நிறுவுனர் நினைவு விழாவிலும், பரிசளிப்பு விழாவிலும் கலந்து உரையாற்றிய யாழ். பல்கலைகழக கருத்துவபீட பொறுப்பாளர் பேராசிரியர் சிவஞானசுந்தரம் மேற்கண்டவாறு கூறினர்.

கல்லூரி மண்டபத்தில் அதிபர். திரு. எஸ். நாகராஜன் தலைமையில் விழா இடம்பெற்றது.

விழாவில் பேராசிரியர் மேலும் பேசுகையில், ''மகாஜனக் கல்லூரியை அமைத்து கல்வித்துறைக்கு சிரிய பணியாற்றிய துரையப்பாப்பிள்ளையின் கோட்பாடுகள், நல்ல சிந்தனைகள் எதிர்கால சந்ததிக்கு உதவ வேண்டும்.

அவரின் கோட்பாடுகள் பாடவிதானத்தில் இடம்பெற வேண்டும், அவரது நல்ல கோட்பாடுகளை மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்'' என்றார்.

திரு. என். சண்முகலிங்கம் பரிசளிப்புப் பேருரை நிகழ்த்தினார்.

(இ-68)

## அன்பளிப்பு

நெடுந்தீவு ஜூலை 6

நெடுந்தீவு ரோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச்சபைசுமார் ரூபா 1000 பெறுமதியான வலைப்பந்தாட்டக் கம்பங்களை மேற்படி வித்தியாலயத்துக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

(இ-111)

## பொருளாதாரம் பற்றி சிந்திப்பவர்கள் நிச்சயம் பனை பற்றியும் சிந்திக்க வேண்டும்

சுன்னாகம், ஜூலை 6

மக்களுக்கு விடுதலை வேண்டுமானால்பொருளாதார விடுதலைபெறவேண்டும். பொருளாதாரம் பற்றிச் சிந்திப்பவர்கள் நிச்சயம் பனையையும் அதனை அபிவிருத்தி செய்வது பற்றியும் சிந்திக்க வேண்டும். எமது பிரதேச அபிவிருத்தியில் உண்மையான அக்கறை உள்ளோர். பனைகளைப் பாதுகாப்பதில் அக்கறை செலுத்துதல் அத்தியாவசியமானது.

பனை அபிவிருத்திச் சபை இயக்குனரும் ''மில்க்வைற்'' அதிபருமான திரு. க. கனகராசா இப் படிக் கூறினர்.

சுன்னாகத்தில் ''கற்பகம்'' விற்பனைக் கூடத்தைத் திறந்து வைத்து அவர் உரை நிகழ்த்தினர்.

திரு. க. கனகராசா மேலும் கூறுகையில் எமது மக்களை பஞ்சமும் பிணியும் பிடிக்காமல் பாதுகாப்பதற்கு சிறந்த வழி பெண் பனைகளைத் தறிக்காமல் காப்பதும், ஆண் பனைகளை அளவறிந்து தறிப்பதும்தான் என்றார்.

சுன்னாகம் பிரஜைகள் குழுத் தலைவர் திரு. தி. மாணிக்கவாசகர், சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. சி. குமரவேல் பனம்பொருள் சபையின் சந்தைப்படுத்தும் உத்தியோகத்தர் திரு. என். திவ்வியராசா, சட்டத்தரணி எஸ். பி. சிவஞானம் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்.

(இ-27)

## தமிழர் இன்னல்களை வெளி உலகுக்கு உணர்த்திய பெருமை பிரஜைகள் குழுவுக்கே

சுன்னாகம், ஜூலை 6

தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணிலேயே சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு- வீடு வாசல்களை இழந்து- துயருறும் இன்றைய நிலையைஉலக நாடுகளுக்கு உணர்த்திய பெருமை பிரஜைகள் குழுக்களையே சாரும்.

சுன்னாகம் பிரஜைகள் குழுவின் தலைவரும் முன்னாள் பிராந்திய கல்விப் பணிப்பாளருமான திரு. தி. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு கூறினர்.

சுன்னாகம் பிரஜைகள் குழுவின் வருடாந்த பொதுக்கூட்டம் சுன்னாகம் ரோமன்கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் திரு. தி. மாணிக்கவாசகரின் தலைமையில் நடைபெற்றது.

திரு. தி. மாணிக்கவாசகர் மேலும் பேசுகையில் சகல பிரதேசங்களிலும் உள்ள மக்களின் நலன் காக்கும் ஸ்தாபனமாக பிரஜைகள் குழுக்கள் உருவாகி வருவது நல்லாரோக்கியமான சமுதாய அமைப்புகளுக்கு நல்ல அறிகுறியாகும் என்றார். (இ-87)

## தந்தை செல்வா தொடக்க நிலை பள்ளியின் நிலை குறித்து கல்வி அதிகாரி கவலை

காங்கேசன்துறைஜூலை6

எமது மத்தியில் உள்ள பல பாடசாலைகள் இடிந்தும், உடைந்தும் சேதமடைந்த நிலையில் இருப்பது கல்வித்துறைக்கு பெரும் பாதிப்பாகும். தந்தை செல்வாவின் பெயரைக் கொண்டு விளங்கும் இப்பாடசாலையும் அந்நிலையிலிருப்பது எமக்கு பெரும் அவமானம். சகலரும் இணைந்து இப்பாடசாலையை உடனடியாக புனர்நிர்மானம் செய்ய வேண்டும்.

தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளியின் இல்ல மெய்வல்லுனர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். கல்வி அதிகாரி திரு. இ. க. குலசேகரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விழாவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் திரு. சிறீ புஸ்பநாதன் உட்பட பலர் உரை நிகழ்த்தினர்.

வெற்றி பெற்றோருக்கு திருமதி குலசேகரம் பரிசில்கள் வழங்கினர்.

(சி-68)

## குருமணிப்பட்டம் அளித்து கௌரவிக்கப்பட்டார்

மானிப்பாய் ஜூலை 6

தனக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளை தமது மாணவர்களின் உதவியுடன் காலந்தவறாது செய்து முடிப்பவரே சிறந்த குருவாக அமைவார்கள். அந்தப் பணியை சிறப்புடன் செய்து முடிக்கும் ஆற்றல் பெற்ற குருக்களுக்கு 'குருமணி' என்ற பட்டம் மிகவும் பொருத்தமானது.

உடுவில் சிவஞானப் பிள்ளையார்ஆலய தேர்த் திருவிழாவன்று அராலி பிரம்மஸ்ரீ. வெ. குகசாமிக் குருக்களுக்கு 'குருமணி' என்றபட்டம் அளிக்கப்பட்டு பொன்னாடை போர்த்தப்பட்டது.

கோவில் ஆதினகர்த்தாவும், சிவஞானவாரியத்தலைவருமான பிரம்மஸ்ரீ. வா. முத்துக்குமாரசாமி சர்மா பொன்னாடை போர்த்திப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

ஆண்டுதோறும் சிவஞான வாரியத்தின் ஆதரவில் நடைபெறும் பட்டமளிப்பு வைபவ நிகழ்ச்சியில் இம்முறை மஹோற்சவக் குருவானவர் கௌரவிக்கப் பட்டார்.

சிவஞான வாரிய செயலாளர் திரு. எம். எஸ். சிறீதயாளன்தேர்த் திருவிழாவின் தத்துவம் பற்றி எடுத்துரைத்ததுடன் குருக்களை பாராட்டியும் பேசினர்.

திரு. க. கணேசரத்தினமும் குருக்களுக்கு பாராட்டுரை வழங்கினர்.

(உ 90)

## கல்விச் சேவை ஆணைக் குழுவின் கண்காணிப்பில்

மட்டக்களப்பு, ஜூலை 6

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியுடன் மேற்கொள்ளப் படவிருக்கும் கல்விபுனர் வாழ்வுத் திட்டம் கல்விச்சேவை ஆணைக்குழுவின் கண்காணிப்பில் மேற்கொள்ளப்படும்.

மேற்படி வேலைத்திட்டத்தை விரைவில்ஆரம்பிப்பதற்காக பொறியியலாளர், தொழில் நுட்ப உத்தியோகத்தர், கட்டடப் பரிசோதகர் உட்படத் தேவையான உத்தியோகத்தர்களுக்கான விண்ணப்பங்கள் தற்போது ஒப்பந்த அடிப்படையில் கோரப்பட்டுள்ளன.

(இ-21)

## பட்டதாரிகளுக்கு வேலை வழங்க புதிய திட்டம்

கொழும்பு, ஜூலை. 6

வேலையற்ற பட்டதாரிகளுக்கு அவர்கள் படித்த பல்கலைக்கழகங்கள் ஊடாக வேலைவாய்ப்பு வழங்கும் திட்டம் ஒன்றை அமுல் நடத்த அரசு தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தை அமுல் நடத்த ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் பிரதி உபவேந்தர் ஒருவரை நியமிக்க கல்வி அமைச்சர் உத்தேசித்துள்ளார்.

(ஓ-எ)

## விதவைப் பெண்களுக்கு 'எகெட்' ஸ்தாபனம் உதவி

திருகோணமலை ஜூலை 6

30 - 35 வயதுக்கு இடைப்பட்ட விதவைப் பெண்களுக்கு 'எசெட்' ஸ்தாபனம் ரூபா 2000 முதல் 3000 ரூபா வரையில் வழங்கவுள்ளது.

விதவைப் பெண்கள் தாங்களாகவே ஒரு தொழிலை மேற்கொள்ளு முகமாக இந்தப்பணம் நன்கொடையாக வழங்கப்படவுள்ளதாக எகெட் ஸ்தாபனப் பேச்சாளர் ஒருவர் கூறினர்.

இதே போன்று பல தடுப்பு முகாம்களில் ஒரு வருடத்துக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட இளைஞர்களுக்கு தலா 2000 ரூபா வீதம்எகெட் ஸ்தாபனம் நன்கொடையாக வழங்கியுள்ளது.

(இ - 150)



(C 5670)



(C 5665)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEW MASTER INSTITUTE
B. M. C. LANE, JAFFNA.

## 90 A/L WEEKEND CLASSES

## கலை, வர்த்தகம்

சின்னத்தம்பி — பொருளியல் - 8 a.m.
சந்திராஜா — அளவையியல் - 9 a.m.
யோகராஜா — கணக்கியல் - 10 a.m.
தேவா — வர்த்தகம் - 11 a.m.
நாகேஸ்வரன் — தமிழ் - 10 a.m. / இந்துநாகரிகம்-11 a.m.
கேசவன் — அளவையியல் - 12 noon

ஆரம்பம்:
**10-07-88 Sunday**

(C 5654)


### 31ஆம் நாள் நினைவஞ்சலி



உடுவில்
திருமதி
அரிநேசராணி சின்னத்தம்பி
(இளைப்பாறிய அதிபர்)

தோற்றம்: 20-07-1916  மறைவு: 07-06-1988

அன்பாலே அரவணைத்து
ஆசையுடன் கல்வியூட்டி
ஆளாக்கி எம்மையெல்லாம்
ஆதரித்த எம் ராணியக்கா

முருகமூர்த்தி நும் சொத்தென்றெண்ணி
முழுக்குடும்பமாகவே உழைத்திட்டீர்
அதிபராய், ஆசிரியராய்,
நலன் விரும்பியாய்,
வாழ்ந்திட்டீர், வாழ்கின்றீர்
இன்றும் மாடி மண்டபங் கட்டி
மாணவர்க்கு கல்வி புகட்ட
மனதாரச் செயற்பட்டீர்
மாடி மண்டபம் மட்டமாக நிற்கையிலே
மாயமாய் மறைந்திட்டீரே.

ஊரெரிந்த வேளையிலே
உறுதியுடன் இருந்து விட்டு
ஊதாரிகள் வந்தவுடன்
ஏன் உம் உயிரை
மறைத்திட்டீர்?
ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் மற்றை
யோர்க்கும் நல் வழி காட்டினீர்-தங்களை
நெஞ்சம் மறப்பதில்லை
நினைவும் மறப்பதில்லை
நெஞ்சமதில் நித்தம் உம்மை
நினைத்திருப்போம் ராணியக்கா.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவ சங்கத்தினர்.
உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை.

### அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

சிவபதமெய்திய திருமதி. அரிநேசராணி சின்னத்தம்பி அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் 7-7-88 வியாழன் காலை 10. 00 மணிக்கு நடைபெறும். இவ் வைபவத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் மற்றும் பல வழிகளிலும உதவிகள் புரிந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சகோதரர், பிள்ளைகள்,
மருமக்கள், குடும்பத்தினர்.

தகவல்:-
கா. கணேசதாசன்,
'கலாநிதி'
உடுவில், சுன்னாகம். (5779)

### நூல் அரங்கேற்ற விழா

காங்கேசன்துறை ஜூலை 6 "நகுலேஸ்வரர் திருப்பதிகம்" நூல் அரங்கேற்ற விழா கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் சிறப்பாக இடம் பெற்றது.

இலக்கண வித்தகர் பண்டிதர் இ. நமசிவாய தேசிகர் இந் நூலை இயற்றி வழங்கியுள்ளார்.

பண்டிதர் மு. கந்தையா தலைமையில் நடந்த அரங்கேற்ற விழாவில் திரு. க. உமாமகேஸ்வரன் வெளியீட்டுரை நிகழ்த்தினர்.

கலாநிதி. நா. சுப்பிரமணியம் சிறப்புரை ஆற்றினர்.

திரு. ச. விநாயகமூர்த்தி பண்டிதர் இ. அப்புத்துரை ஆகியோர் நயரை ஆற்றினர். (இ-68)

### இலவச நூல் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம் ஜூலை-6 மீரா பப்ளிக்கேசன் நிறுவனத்தின் இலவச நூல் வழங்கும் வைபவமும் அதற்கான கூப்பன் அதிர்ஷ்டம் பார்க்கும் நிகழ்ச்சியும் எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நல்லை ஆதினத்தில் நடைபெறும் இந்த வைபவத்தில் ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சார்ய சுவாமிகளினல் கூப்பன்கள் அதிர்ஷ்டம் பார்க்கப் படும்.

இதற்கான அதிஷ்டக் கூப்பன்கள் மீரா வெளியீடான "மழைக்காலம் நாவலுடன் இணைக்கப்பட்டு வந்தது குறிப்பிடத் தக்கது. (சி)

### சுடப்பட்ட மூவர்

மட்டக்களப்பு ஜூலை 6 இந்தியப் படையினர் அண்மையில் மட்டக்களப்பு நகரசுற்றுடலில் மேற்கொண்ட நடவடிக்கையில் போராளிகள் எனக் கருதப்படும் மூவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இருதயபுரம் வாசியான நேசன் எனப்படும் அன்ரனி மரியநேசன் (37 வயது)

மாமாங்க கொலனி வாசியான ஈஸ்வரன் எனப்படும் த. இன்பராசா, (18 வயது)

தாமரைக்கேணி வாசியான சி. அரசன் எனப்படும் ராம்குமார் (19 வயது) ஆகியோரே இம் மூவரும் ஆவர்.

நேசன் என்பவர் இருதயபுரத்திலும் ஏனைய இருவரும் மாமாங்க கொலனியிலும் இடம் பெற்றதேடுதலில் கொல்லப்பட்டனர்.

சடலங்கள் மரண விசாரணையின்றி பொலிஸ் விசாரணையின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன. (இ-21)

### பச்சை இல்லம் முதலிடம்

புங்குடுதீவு, ஜூலை 6 புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி சமீபத்தில் நடைபெற்றது.

மகாவித்தியாலய அதிபர் திரு.க. த. தருமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலாம் இடத்தை பச்சை இல்லமும் 2ஆம், 3ஆம் இடங்களை மஞ்சள், நீலம் இல்லங்களும் பெற்றுக் கொண்டன.

இந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக புங்குடுதீவுப் பாடசாலைகளின் கொத்தணி அதிபர் திரு. அ. செ. நல்லையாவும், சிறப்பு விருந்தினராக கல்வி அதிகாரி திரு. கி. புவேந்திரனும் கலந்துகொண்டனர். (131)


## விக்னு டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம்

கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு
தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்

**A/L 89** SAT. & SUN.
புதிய பிரிவு ஆரம்பம்
10 - 7 - 1988 [8-00]

**90-ம்** ஆண்டுக்கான பிரிவுகள் ஆரம்பமாக உள்ளது. பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு: பொருளியல்: திரு. கிருஷ்ணனந்தன், தமிழ்: திரு. குழந்தை, கணக்கியல்: திரு. வன்னியசிங்கம், இந்துநாகரிகம்; திரு. காரை சுந்தரம்பிள்ளை, வர்த்தகவியல்: திரு. லங்கா, புவியியல்: திரு. குணராஜா, அளவையியல்: திரு. சுப்பிரமணியம், அரசியல்: திரு. மஃறூப்

மு.குறிப்பு:- i கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் ஒருங்கிணைந்து போதிக்கப்படும் ஒரே நிறுவனம்.

ii கலை, வர்த்தக வகுப்புக்கள் எமது நிறுவனத்தில் மட்டுமே சிறப்பாக நடைபெறும்.

**89**-ம் ஆண்டுக்கான DAY CLASSES ஆரம்பமாக உள்ளது. (சி 5608)



## வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள்
**G.A.Q 89 APRIL**
**B.A 88 DECEMBER**

பிரிவு 2, துரித மீட்டல் ஆரம்பம்
10. 7. 1988 மாலை 2 மணி

எமது ஆசிரியர் குழு:
பொருளியல்:- திரு. கிருஷ்ணனந்தன்
தமிழ்:- திரு. குழந்தை
இந்துநாகரிகம்:- திரு. காரை சுந்தரம்பிள்ளை
புவியியல்:- திரு. குணராஜா
அரசியல்:- திரு. மஃறூப்

முக்கிய குறிப்பு:
I பட்டப் படிப்பு மாணவர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு
II இவ் ஆசிரியர்கள் எமது நிறுவனத்தில் ஒருங்கிணைந்து சிறப்பாகப் போதனைகளைநடத்துகின்றனர்.

**விக்னு டியூசன் சென்ரர்**
52, ஸ்ரான்லி ரேட்,
யாழ்ப்பாணம்.
(C. 5668)


### முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



பிலிப் ஜூசைப்பிள்ளை

மலர்வு 9.8.1925  உதிர்வு 6.7.1987

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்
பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் இருப்பிடமாய்
நேசத்தின் சரங்களாய்
மலரின் சுகந்தமாய்
தேனின் இனிமையாய்
இருந்து நன்னெறி காட்டி வளர்த்த
அன்புத் தெய்வமே!
எம்மை விட்டு மறைந்து விட்டாயோ?

உமது பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தெல்லிப்பழை,
சாவெட்டு (5771)


## புதிய உயர் கல்லூரி
## 89 A/L கலை — வர்த்தகம்

1 வருட வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | குமாரவேல் |
| வர்த்தகம் | — | தேவா |
| கணக்கியல் | — | ஸ்ரீ |
| அளவையியல் | — | சயந்தன் |
| தமிழ் | — | குழந்தை |
| இந்துநாகரிகம் | — | அருள்நங்கை |
| புவியியல் | — | குணராஜா |
| அரசியல் | — | குமார் |

## A/L DAY CLASSES
1-8-88 ஆரம்பமாகவுள்ளன.

விபரங்களுக்கு :
**S. அருள்நங்கை**
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(C 5658)



## உடனடி வேலைவாய்ப்பு

### KUWAIT
1. Cleaners — 30 KD
2. Office Boys Kuwait — 30 KD — 5 (English)
3. Audio Vedio Technician — 65 KD — 1

### SAUDI ARABIA
1. Cleaners — 320 & 100 Riyals

### HOSPITAL

| | | | |
|---|---|---|---|
| 1. | Security Clerk | — 03 — 400 & 100 | Riyals |
| 2. | Food Service Attendant | — 10 — 350 & 100 | ... |
| 3. | Cashier | — 07 — 400 & 100 | ... |
| 4. | H/V Driver (Mini Bus) | — 07 — 550 & 100 | ... |
| 5. | Video TV Opt. | — 06 — 400 & 100 | ... |
| 6. | Librarian (Asst.) | — 02 — 400 & 100 | ... |
| 7. | Medical Custodian | — 01 — | |
| 8. | Store Record Clerk | — 02 — 400 & 100 | ... |
| 9. | Receiving Clerk | — 04 — 400 & 100 | ... |
| 10. | Tel. Switch Operator | — 02 — 400 & 100 | ... |
| 11. | Security Guard | — 10 — 350 & 100 | ... |
| 12. | Security Shift Leadman | — 03 — 500 & 100 | ... |
| 13. | Fire Inspector | — 02 — 500 & 100 | ... |
| 14. | Clerk Typist | — 05 — 425 & 100 | ... |
| 15. | Welder (Oxygen) | — 02 — 450 & 100 | ... |
| 16. | Cleaning Labourers | — 52 — 330 & 100 | ... |

10 hours duty

### CONSTRUCTION

| | | |
|---|---|---|
| 1. | Auto Mechanic | — 03 — 750 & 150 |
| 2. | Carpenter Shuttering | — 08 — 550 & 150 |
| 3. | Tile Fixers | — 04 — 550 & 150 |
| 4. | Steel Fixers | — 05 — 550 & 150 |
| 5. | Electricians | — 02 — 550 & 150 |
| 6. | Mason | — 04 — 550 & 150 |
| 7. | Labourers | — 13 — 420 & |

மேற்கூறிய Hospital உம், Constructionஉம் நேர்முகப் பரீட்சை கொழும்பில் 6ஆம், 7ஆம், 8ஆம் திகதிகளில் நடைபெறும். அதன் பின்னே மற்றவைகளை ஆயத்தம் பண்ணலாம்.

### OPEN VISA
1. Farmers — 450 & Food — 10
2. Sign Board Pounter — 800 & 100 — 1

உடன்படிக்கை மூன்று வருடங்கள்.

பதிவு செய்து வையுங்கள் :

| | |
|---|---|
| Accountant | — 1800 SR |
| Salesman | — 1000 SR |
| Plant Factory | — 1100 SR |
| Drivers (Concrete Mixer) | — 1000 SR |
| Store Keeper | — 1000 SR |
| Electrician | — 900 SR |

நிபந்தனை :
1. விசா பெற்றுக் கொடுத்தபின், அறிவிக்கும் காலத்தில் பணத்தைச் செலுத்தி வெளிநாடு செல்லத் தவறினல் முற்பணத்தையோ கடவுச்சீட்டையோ திரும்பப் பெறமுடியாது.
2. விசா பெற்றுத்தர எடுக்கும் குறிப்பிட்ட காலத்துக்குள் என்னிடம் கடவுச்சீட்டை நீங்கள் திருப்பிப்பெற முடியாது. தெளிவாக ஒத்துழையுங்கள். குவைத் சில நேரங்களில் குறிப்பிட்ட காலத்துக்குள் வரச் சுணங்கலாம்

தயவு செய்து காலை 7 மணி தொடக்கம் பி. ப. 1 மணிவரை சந்திக்கவும். என்னை இங்கு சந்திக்கத் தவறினல் கொழும்பில் **CROSS TRAVELS, 65, 67, Hospital Street, Colombo-1** இல் சந்திக்கலாம். அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

## M. Shanmugaratnam
(யாழ். கல்லூரியின் பழைய மாணவன்)
EX—SI of POLICE.
**Sivankovillady, Sitankerny.**

அல்லது

(1) V. கனகலிங்கம்
7-ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

(2) அமிர்தலிங்கம் மாஸ்ரர்,
சிங்கமகாள்,
சண்டிலிப்பாய்.

(3) நோபிட் (ஜோர்ச்)
ராஜா வெல்டிங் வேர்க்ஸ்,
சங்கானை ரேட், அச்சுவேலி.

கொடுக்கல் வாங்கல் சந்தேகம் ஏற்படின் நேரடியாக என்னுடன் தொடர்பு கொள்ளவும், (C-5667)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

பழையம் எனக்கருதிப் பண்பல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும்.

**பொருள்:**

'யாம் அரசர்க்குப் பழமையானவராய் உள்ளோம்' எனக் கருதித்தகுதி அல்லாதவற்றைச் செய்யும் உரிமை கேட்டைத் தரும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல: - 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073
06-07-1988 த. பெ. இல. 23


## பயம் போக்கும் மருந்து

நிதி நிறுவனங்களில் பொது மக்கள் இடும் வைப்புப் பணத்துக்கு, எந்தச் சூழ்நிலையிலும், எந்த விதத்திலும் பாதிப்பு ஏற்படாமல் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்பட்டிருக்கிறது.

நிதி நிறுவனங்களில் இடப்படும் தமது வைப்புப் பணத்துக்கு என்ன நேருமோ, ஏது ஆகுமோ என்று மக்கள் அச்சமுறும் நிலையை அரசு முற்றாக, சந்தேகத்துக்கு இடமின்றி நீக்கிவிட்டது.

மக்களின் பணத்துக்கு பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்க வல்ல சட்ட விதிகளை அரசு இயற்றிச் செயற்படுத்தத் தொடங்கி இருப்பது மக்களுக்குப் பெரும் ஆறுதலாகும்.

மத்திய வங்கி, அரசின் பிரதிநிதியாக நின்று, நிதி நிறுவனங்களை நெருங்கிச் சென்று, மிக உன்னிப்பாக அவதானித்து, கண்காணித்து, கண்டித்து, தண்டித்து மக்கள் பணத்துக்கு எவ்வித தீங்கும் நடந்துவிடாமல் பார்த்துக் கொள்ளப் போகிறது. அதற்குரிய சகல அதிகாரங்களையும் புதிய சட்டவிதிகளின் கீழ் அரசு, மத்திய வங்கிக்கு வழங்கி இருக்கிறது.

மக்களின் பணத்தைத் துஷ்பிரயோகம் அல்லது மோசடி செய்ய முனையும் நிதி நிறுவனங்களைக் கலைத்துவிடாமல் மத்தியவங்கியே பொறுப்பேற்று நேர்மையும், நிர்வாகத் திறமையும் உள்ள வேறு முகாமைத்துவத்திடம் கையளித்து, நிறுவனத்துக்கு நிதி உதவிகளை வழங்கி அதற்குப் புத்துயிர் ஊட்டும் புதிய ஏற்பாடு அரசு அமுலுக்கு கொண்டு வந்துள்ள விதிமுறைகளுக்குச் சிகரம் வைத்தாற் போல உள்ளது.

அது ஒன்றே மக்கள் பணத்துக்கு ஊறு எதுவும் விளையாது பாதுகாத்து உத்தரவாதம் வழங்க வல்லதாகும். எனவே மக்கள் தமது பணத்துக்கு பாதிப்பு ஏற்படும் என்றோ பறிபோகும் என்றோ பயம் கொள்ளும் நிலை முற்றாகப் போக்கடிக்கப்பட்டுள்ளது. தமது பணத்துக்கு பாதுகாப்பு உத்தரவாதம் வழங்குவதற்கு அரசாங்கத்தைவிட வேறு எவரை மக்கள் எதிர்பார்க்க முடியும்?

மக்களின் பணத்தை நேர்மையற்ற விதத்தில் கையாடவோ அல்லது நிர்வாகத் திறமை இல்லாமல் பணமுடை நிலைக்கு — வங்குரோத்து நிலைக்கு — நிதி நிறுவனத்தை நிர்வாகிகள் கொண்டு செல்லாமல் முன்னெச்சரிக்கையுடன் தடுத்து நிறுத்தவும் கண்டிப்பான விதிமுறைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

மத்திய வங்கி நினைத்த நேரத்தில் நிதி நிறுவனம் ஒன்றின் கணக்கு வழக்கு நிலைமையைப் சோதனை செய்யவும், தகவல்கள் அறியவும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. மத்திய வங்கியின் பணிப்புரைகளைக் கடைப்பிடிக்காத அல்லது கட்டுப்படாமல் செயற்பட முனையும் நிதி நிறுவனங்களின் நிர்வாகத்தினரைத் தண்டிக்கவும் புதிய சட்டவிதிகள் வகை செய்கின்றன.

நிதி நிறுவனங்கள் மத்திய வங்கியின் கட்டுப்பாட்டின் கீழேயே இயங்கி வருகின்றன. பதிவு செய்யப்பட்ட — அங்கீகாரம் பெற்ற சுமார் 72 நிதி நிறுவனங்களில் ஒரு சில, மிகச் சில, நிறுவனங்கள் தவறிழைத்தன.

சம்பந்தப்பட்ட நிறுவனங்கள்—

மக்களின் வைப்புப் பணத்தை ஏப்பம் விடும் அளவுக்கும், வைப்புப் பணத்தைக் கரைத்துவிட்டுப் பணப் பெறுமதி இல்லாத காசோலைகளை வழங்கியும்-

தமது நிறுவனத்தை நடத்த முடியாத அளவுக்கு மக்களின் பணத்தைத் துஷ்பிரயோகம் செய்து வங்குரோத்தாக்கி விட்டு, வாடிக்கையாளரை நடுத்தெருவில் நின்று தவிக்கவிட்டும்— தவறிழைத்தன.

அதனாலேயே அரசாங்கம் கடும் சட்டவிதிகளைக் கொண்டு வர நேர்ந்தது.

அத்தோடு நேர்மையாகவும், நாணயமாகவும், திறமையாகவும் இயங்கும் நிதி நிறுவனங்கள் மீதும் மக்களுக்குச் சந்தேகம் பிறக்க ஏதுவாகியது, அனாவசியமாக அவநம்பிக்கை தோன்றியது.

அரசாங்கம் கொண்டு வந்துள்ள புதிய விதிமுறைகள் மக்களின் அனாவசிய அவநம்பிக்கையையும், பயத்தையும் போக்கி உள்ளன.

எனவே மக்கள் தமது பணவைப்புகளை நம்பிக்கையுடன் நிதி நிறுவனங்களில் இனி முதலீடு செய்யலாம்.

இடமறிந்து பெண் கொடு என்பார்கள். பெண்ணை மட்டுமென்ன பொன்னையும்— பணத்தையும்—இடமறிந்து கொடுப்பது அவசியம். நம்பிக்கையும், பாதுகாப்பும் தரவல்ல விதத்தில், திறமையுடன் இயங்கும் நிதி நிறுவனங்களை இனங்கண்டு முதலீடுகளைச் செய்தல் அவசியம். கல் எல்லாம் மாணிக்கக் கல் ஆகாதே!

அமெரிக்காவுக்கு எதிராக

# போர் முனை செல்லத் தயாராகுங்கள்!

# ஆயதுல்லா கொமேனி அறைகூவல்!!

தெஹ்ரான், ஜூலை 5

போர்முனை சென்று இஸ்லாமியப் புரட்சி ஒன்றை நடத்தத்தயார் நிலையில்இருக்கும்படிஈராவியர்களுக்கு ஆன்மீகத் தலைவர் ஆயதுல்லா கொமேனி வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

அமெரிக்கப் போர்க்கப்பல் ஒன்று ஈரானிய விமானம்ஒன்றைச் சுட்டு வீழ்த்தியதன் பின்னர் முதல் தடவையாக நாட்டுமக்களுக்கு ஆயதுல்லா கொமேனி பேசினார். அப்போதே இந்த வேண்டுகோளை அவர் விடுத்தார்.

அமெரிக்கத் தாக்குதல் இஸ்லாமிய சிந்தனைப் புரட்சிக்குவிடுக்கப்பட்ட சவால். இச்சவாலை ஈரானியர் எதிர்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும் என்றும் ஆயதுல்லா கொமேனிதெரிவித்தார். (எ)

### ராஜீவ் - வெங்கட் பேச்சு

புதுடில்லி, ஜூலை 5

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, நேற்றுக் காலை ஜனாதிபதி வெங்கட்ராமனைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

ஒரு மணித்தியாலம் வரை நீடித்த இப் பேச்சுக்கள் வழமையான ஒன்று என்று அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

### உபஜனாதிபதி வேட்பாளர்

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் சார்பில் உப ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் விண்வெளி வீரர் ஜோன் கிளென் என்பவரை நிறுத்தும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளராக மைக்கல் டுகாகிஸ் என்பவரை ஜனநாயக கட்சி தெரிவு செய்துள்ளது. (எ)

# 'விளங்கிக் கொள்ளக் கூடிய தவறு' விமானத் தாக்குதல் பற்றி றேகன்!

வாஷிங்டன் ஜூலை 5

290 பயணிகளுடன் சென்ற ஈரான் விமானத்தைச் சுட்டு வீழ்த்திய சம்பவம் 'விளங்கிக் கொள்ளக் கூடிய ஒரு தவறு' என்று அமெரிக்க அதிபர் றேகன் தெரிவித்தார்.

இதனிடையில், சைபீரியா மீது பறந்துசென்ற தென்கொரியாவின் பயணிகள்விமானம் ஒன்றை சோவியத் அரசு சுட்டு வீழ்த்திய சம்பவத்தைப் போன்றது அல்ல இது என்று சோவியத் யூனியன் வர்ணித்தது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற இச்சம்பவத்தில் அந்த விமானம் சோவியத் பிரதேசத்தில் ஊடுருவல் செய்த போது சுட்டு வீழ்த்தப்பட்டது. ஆனால் கடந்த ஞாயிறு ஈரானின் சொந்தப் பிரதேசத்தில் பறந்தபோது ஈரான் விமானம் சுடப்பட்டது.

இப்படி சோவியத் வெளியுறவு அமைச்சு அதிகாரி தெரிவித்தார். (எ)

# பெரியாரின் 5 அம்சத் திட்டத்தில் காங்கிரஸ் ஒழிப்பும் ஒன்று!

### காளிமுத்து பேச்சு

சென்னை, ஜூலை 5

அ. தி. மு. க. வின் முதல் எதிரி காங்கிரஸ் தான். தாயின் சிம்மாசனத்தைப் பறித்த காங்கிரஸைப் பழி வாங்கியே தீரவேண்டும்.

இப்படி முன்னாள் அமைச்சர் காளிமுத்து தெரிவித்தார்.

சென்னையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் மேலும் சொன்னதாவது;

**முதல் எதிரி**

அ. தி. மு. க. வின் எதிரிகள் யார் என்று இப்போது தெளிவாக தெரிகிறது. டெல்லியில் ஆட்சி புரிவோர் எதிரிகள், டெல்லிக்கு துணை போகும் வில்லியின் கூட்டம் எதிரிகள். முதல் முக்கிய எதிரி காங்கிரஸ் தான். நன்றி கெட்ட, தாயின் சிம்மாசனத்தை பறித்த அந்த காங்கிரசை பழி வாங்கியே தீரவேண்டும்.

அந்த உணர்வு இல்லையென்றால் திராவிட இயக்கத்துக்காரன் உடம்பில் ஓடுவது ரத்த மல்ல.

எம். ஜி. ஆர். 'ஆட்சியை கலைத்த காங்கிரஸ் இன்று அவரது புகழையும் அழிக்க சதி திட்டம் தீட்டுகிறது. அந்த சதியை முறியடிக்க சத்தியத் தாய் அன்னை ஜானகி தலைமையில் அ. தி. மு. க. பட்டாளம் இருக்கிறது.

**பதில் சொல்ல வேண்டும்**

3 ஆண்டுகள் அரசியலில் இருந்த ஜெயலலிதா அரசியலை கொச்சையாக பேசினால் 30 ஆண்டுகள் அரசியலில் பொது மேடைகளில் பேசி வருகிற காளிமுத்து பேச மாட்டானா?

காளிமுத்து என்னை கொச்சையாக பேசுகிறார் என்று மக்களை திசை திருப்ப பார்க்கிறார் ஜெயலலிதா. ஒன்று இந்த காளிமுத்துக்கு பதில் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் அரசியல் பேசுவதை நிறுத்த வேண்டும். அதுவரை ஜெயலலிதாவை விட மாட்டேன்.

காங்கிரசுக்கு பயப்படாத காளிமுத்து இந்த ஜெயலலிதா கும்பலுக்கு பயப்பட மாட்டான். நான் காங்கிரஸை வேட்டையாட செல்கிறேன். வேட்டைக்கு செல்கிறபோது காலில் மிதிபட்டு சாகும் குழிமுயல்கள் தான் ஜெயலலிதா கும்பல்.

காங்கிரஸ் – ஜெயலலிதா ஆகிய இரண்டு சக்திகளையும் அழிக்காக வேண்டும்.

**காங்கிரஸ் ஒழிப்பு**

பெரியார் சொன்ன 5 அம்ச திட்டங்களில் ஒன்று காங்கிரஸ் ஒழிப்பு திட்டமாகும்.

காளிமுத்துவுக்கு எம். ஜி. ஆர். இட்ட கட்டளையும் இது தான்.

இவ்வாறு காளிமுத்து பேசினார். (எ-4)

### சீன ஏவுகணைகள்

திரிபொலி ஜூலை 5

சீனாவில் இருந்து சில்க்வோம் ஏவுகணைகளை வாங்க லிபியா நடவடிக்கை எடுத்து வருவதாக அறிவிக்கப்படுகிறது. (எ)

### நிராகரிப்பு

கரிபியன் தீவான ஹெய்தியில் ஜனநாயக ஆட்சியை மீண்டும் கொண்டுவர வெளிநாட்டு இராணுவத் தலையீடு வேண்டும் என்ற கோரிக்கையைப் பதவி கவிழ்க்கப்பட்ட ஜனாதிபதி லெஸ்லி மணிகற் நிராகரித்தார். (எ)

**வெளி உலகில்**

### பீரங்கிப்படகு ராஜதந்திரத்தில் அமெரிக்கா நாட்டமாம்

போதைவஸ்துத் தடுப்புஎன்றபெயரில்உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுவதாக பஹாமாஸ் பிரதமர் குற்றஞ்சாட்டி இருக்கிறார்.

13 உறுப்பு நாடுகள் அடங்கிய கரிபியன் சமூக அமைப்பு மாநாட்டில் பஹாமாஸ் பிரதமர் பேசினார்.

அமெரிக்கா 'பீரங்கிப் படகு ராஜதந்திரத்தை'க் கடைப்பிடிக்கத் தொடங்கி இருப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

அமெரிக்காமீதுபலத்த கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டபோது பிரதிநிதிகள் கரகோஷம் செய்து அதனை வரவேற்றனர். என்று அறிவிக்கப்படுகிறது. (எ)

### ஈரானில் நேற்று துக்கதினம்

விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதில் உயிரிழந்த 290 பயணிகளுக்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக ஈரானில் நேற்று துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

பஸ் நிலையப் பகுதி

# வீதிகளில் வியாபாரம் செய்வோருக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம் ஜூலை 6

யாழ் பஸ் நிலையப் பகுதியை அண்டியுள்ள கடை உரிமையாளர்கள் தமது கடைக்குவெளியே வீதிகளை ஆக்கிரமித்துக் கொண்டுவியாபாரத்தை தொடர்வார்களாயின அவர்களது கடைகளின் அனுமதிப் பத்திரங்கள் ரத்தாகும் சாத்தியக்கூறுகள் இருப்பதாகத் தெரிகிறது.

யாழ்- நகரின் முக்கிய வீதிகளில் உள்ள சில கடை உரிமையாளர்கள் தமது கடையை விட்டு வெளியேயும் மேசைகளைப் போட்டு வியாபாரத்தை நடத்துகிறார்கள்.

இதனால் வீதியில் நெருக்கடி ஏற்படுவதுடன், விபத்துக்கள் ஏற்பட்டு உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன.

இது தொடர்பாக யாழ்- மாநகர சபை ஆணையாளர் திரு சி- வி- கே. சிவஞானத்திடம்பலரும் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஆணையாளரிடம் இது பற்றி கேட்டபோது அவர் கூறியதாவது:-

தற்போதைய சீரற்ற சூழ்நிலையை சில கடை உரிமையாளர்கள் தமக்குச் சாதகமாகப் பயன் படுத்துகிறார்கள்-

சுமுக நிலை ஏற்பட்டதும் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு கடைகளின் அனுமதிப் பத்திரங்களை ரத்துச் செய்யும் வாய்ப்புகள் இருக்கின்றன-

எனவே இதை உணர்ந்து மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படாதவாறு கடை உரிமையாளர்கள் நடந்து கொள்ளவேண்டும் என்று கூறியுள்ளார்- (ஒ - 10)

### கோவிலில் சடலம்

திருகோணமலை ஜூலை 6

திருமலை மடத்தடிச் சந்தியிலுள்ள வீரகத்திப் பிள்ளையார் கோவிலில் அழுகிய நிலையில் ஒரு பெண்ணின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

சுற்றுடலிலுள்ள மக்கள் துர்நாற்றம்வீசியதை அடுத்து கோவிலுக்குள் சென்று பார்த்தனர்.

கோவிலின் சுவாமி இளைப்பாறும் அறையிலுள்ளஆசனத்தின் பின்புறமாக சுவரோரமாக இச்சடலம் கிடக்கக் கண்டு பிடிக்கப்பட்டது.

சடலம் அடையாளம் காணமுடியாதவாறு அழுகிய நிலையில் கிடந்தது. (இ - 150)

### புதிய ஜீப்

தாளையடி, ஜூலை 6

கிளிநொச்சி பிரதேச கல்விப் பணிமனைக்கு புதிய ஜீப் ஒன்றை கல்வி அமைச்சு வழங்கி உள்ளது. (இ-144)

### தனியார் வாகனங்களில் படையினர்

புதுக்குடியிருப்பு ஜூலை6

தனியார் வாகனங்களிலும் பஸ்களிலும் அமைதிப்படையினர் அதிக அளவில் பிரயாணம் மேற்கொள்ளுகின்றனர்

பரந்தனிலிருந்து முல்லைத்தீவுக்கு வரும் வாகனங்களையும் முல்லைத்தீவிலிருந்துபரந்தனுக்கு செல்லும் வாகனங்களையும் அமைதிப்படையினர் [illegible] மறித்து அவற்றில் ஏறிச் [illegible]. (இ126)

# புலோலி, தம்பசெட்டி பகுதிகளில் கோமாரி தடுப்பு மருந்து ஏற்றப்படும்

யாழ்ப்பாணம் ஜூலை 6

எதிர்வரும் 7-ஆம் திகதி வியாழக்கிழமை புலோலி, தம்பசெட்டி, குரும்பைசட்டி, மாலிசந்தி, அல்வாய் ஆகிய பகுதிகளில் கால்நடை [illegible] கால்நடை அலுவலகத்தில் வைத்து காலை 7 மணி தொடக்கம் காலை 10 மணிவரை கோமாரித் தடுப்பு மருந்து ஏற்றப்படும்.

இந்நோய் மிக அபாயகரமானதும், உடனடியாக மரணத்தை ஏற்படுத்தக் கூடியதுமாக இருப்பதால் தடுப்பு மருந்தைச் சந்தர்ப்பம் தவறவிடாது ஏற்றிக் கால்நடைகளைப் பாதுகாத்துக் கொள்ளும்படி பருத்தித்துறை அரச கால்நடை மருத்துவர் எம். தங்கராசா தெரிவித்துள்ளார்.

அத்துடன் நவிண்டில் சக்களாவத்தைப் பிள்ளையார் [illegible] 8-ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் காலை 9 மணிவரை தடுப்பு மருந்து ஏற்றப்படும்.

இந்த மருந்தை வெளியில் எடுத்து. அதிக நேரம் வைத்திருந்தால் அதன் தன்மை கெட்டு விடுமாகையால், தனிப்பட்ட முறையில் அல்லது வீடுகளில் சென்று தடுப்பூசி போடப்பட மாட்டாது என்று அறிவிக்கப்படுகிறது. (இ)

### நினைவுப் பேருரை

பேராசிரியர் சோ. செல்வநாயகம் நினைவுப் பேருரை நாளை 7-ஆம் திகதி வியாழக்கிழமை 2 மணிக்கு நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழகம் கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் நினைவுப் பேருரையை யாழ்பல்கலைக் கழக கலைப்பீடம் பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் ஆற்றுவார்.

பதில் உபவேந்தர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் தலைமை வகிப்பார். (சி)

# ஊர்காவற்றுறைக்கு அதிக மின்சார வசதி

ஊர்காவற்றுறை, ஜூலை6

ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் நிர்வகிக்கப்பட்டுவரும் ஊர்காவற்றுறை பட்டின மின்சாரத் திட்டத்திற்கு மேலும் ஒரு உபமின்நிலையத்தினால் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

தற்போது ஊர்காவற்றுறை பிரதம தபாற் கந்தோருக்கு அருகே உள்ள ஒரேயொரு உபமின் நிலையத்தினூடாக இப்பட்டினத்திற்கு மின்சாரம் வழங்கப்படுகின்றது.

இதனால்இப்பகுதி மின்பாவனையாளர்கள் சீரான மின்சார விநியோகத்தைப் பெறமுடியாமல் உள்ளனர். இது பற்றி ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சிவரத்தினத்திற்கு எடுத்துக் கூறியதன்மூலம் அவர் இலங்கை மின்சாரசபையினரோடு தொடர்பு கொண்டு இப்புதிய திட்டத்தை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுத்துள்ளார்என அறியப்படுகின்றது. (இ-16)

### பிரதம வைத்திய அதிகாரி இல்லை

நெடுந்தீவு. ஜூலை6

நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலையில் கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக ஒரு பிரதம வைத்திய அதிகாரி நியமிக்கப்படவில்லை.

இதனால் இங்கேயே சிகிச்சைபெறக் கூடிய நோய்களுக்கும் நோயாளர் யாழ். வைத்தியசாலைக்குச்செல்லவேண்டியுள்ளது. (இ-111)

### கரந்தனில்

யாழ்ப்பாணம், ஜூலை 6

நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை காலை கல்லூரி அதிபர் திரு. கு. சண்முகநாதன் தலைமையில் நடைபெறும். (ஒ)

**சமய நிகழ்வுகளில்**

### இன்று சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம் ஜூலை 6

யாழ்ப்பாணம் திருவண்ணைநகர் அருள் மிகு செந்தில் கதிர்வேலாயுத சுவாமி திருக்கோவிலில் இன்று புதன்கிழமை காலை சங்காபிஷேகம் நடைபெறும்.

கடந்த 8 நாட்களாக இக் கோவிலில் லட்சார்ச்சனை நடைபெற்றது. (சி)

### மஹா கும்பாபிஷேகம்

கோண்டாவில், ஜூலை 6

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர நாதர் தேவஸ்தான மகாலஷ்மி ஆலய மஹா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 5 மணிமுதல் நடைபெறுகிறது.

இதற்கான கிரியைகள் 4 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. (சி)

### நோர்வே தமிழ் சங்கம் நடத்தும் போட்டி

யாழ்ப்பாணம் ஜூலை6

நோர்வே தமிழ்ச்சங்கத்தினால் சிறுகதை, கவிதைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இந்தச்சங்கத்தினால் அகில இலங்கை ரீதியில் முதன்முறையாக இப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
• தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்றுS/-
• நெகட்டிவ் (PROCESSING) செய்தல் இலவசம்
• சிறப்பான வர்ண நிழற்படச்சுருள்கள்
KODAK FUJI KONICA
TUDOR FORTE B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# உதயன்

06 - 07 - 1938 புதன்கிழமை

...டம் வர்ண நிழற்படப்
பிரதியாக்கம் செய்பவர்களு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

A/L 90

விஞ்ஞான மாணவருக்கு
மீண்டும் பிரிவு I ஆரம்பம்

10-7-1988 Sunday

பௌதிகவியல் Mr. மணியம் B.Sc
Sat. Sun 6. 30 a m
தாவரவியல் Mr. சிவவீரசிங்கம் B.Sc
Sat. Sun 7. 30 a m
விலங்கியல் Mr. தம்பிராஜா B.Sc
Sat. Sun 8. 30 a m
தூய/பிரயோக கணிதம் Mr. கணேசன் B.Sc
Sat. Sun
தூய 7. 30 a m
பிரயோக 8. 30 a m
இரசாயனவியல் Mr. நாகரட்ணம் B.Sc
Sat. Sun 9. 30 am
பௌதிகவியல் Mr. ரவீந்திரநாதன் B.Sc
Sat. Sun 10. 30 a m

பிரிவு II ஆரம்பமாகிறது
ஞாயிறு 11. 30 a. m

தாவரவியல் Mr. சிவவீரசிங்கம் B.Sc
விலங்கியல் Mr. தம்பிராஜா B.Sc
தூய/பிரயோக கணிதம் Mr. வெக்டர் வேலாயுதம் B.Sc
பௌதிகவியல் Mr. ரவீந்திரநாதன் B.Sc
இரசாயனவியல் Mr. நாகரட்ணம் B.Sc
பௌதிகவியல் Mr. மணியம் B.Sc

முன்கூட்டியே பெயர்களைப்
பதிவு செய்து கொள்ளவும்

3ஆம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்.
(அடைக்கலமாதா கோயில் அருகில்)

இரசாயனவியல் Mr. நாகரத்தினம் B.Sc
Sat. Sun 5 00 p m
மணல்தரை லேன், சுந்தர்மடம்

பலவருட அனுபவம் மிக்க எமது ஆசிரியர் குழுவிடம் கல்வி கற்ற அநேக மாணவர்கள் பல்கலைக்கழக பொறியியற் பீடங்களிலும், மருத்துவ பீடங்களிலும் தமது உயர்கல்வியைத் தொடர்ந்து வருகின்றார்கள் என்பதை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வடைகின்றோம். (C 5682)

### கசிப்பு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
யார்குளம் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் இவர்கள்.

மரணவிசாரணை நடத்திய வவுனியா மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் வே. ஸ்ரீராஜேஸ்வரன் தமது அறிக்கையில் ''நச்சுத்தன்மை கொண்ட திரவம் அருந்தியதால் மரணம் ஏற்பட்டது'' என்று தெரிவித்துள்ளார். (ஒ-164)

### பணம்.......

(1ம் பக்கத் தொடர்ச்சி)
விரோத செயல்களில் ஈடுபடுபவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த விடயத்தில் விழிப்பாக இருக்கும்படி மக்களையும் வர்த்தக ஸ்தாபனங்களையும் கேட்டுக்கொள்ளுகிறோம். (ஒ-க)

### இணைப்பு ---

(1ம் பக்கத் தொடர்ச்சி)
தலைப் புலிகள் ஒப்படைத்தால் தான் இணைப்புக் குறித்த தமது உத்தியோகபூர்வ பிரகடனத்தை வெளியிட முடியும் என ஜனாதிபதி ஜெயவர்த்தன இந்திய அதிகாரிகளுக்குத் தெளிவாகத் தெரிவித்து விட்டதாக தற்போது அறியவருகிறது.

''ஆயுத ஒப்படைப்பா? வடக்கு-கிழக்கு இணைப்புக்கான ஜனாதிபதியின் பிரகடனமா? - எது முதலில் நடைபெறவேண்டும் என்பது குறித்து இருதரப்பினருடனும் பேசிஇணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியில் இந்திய அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர். சென்னையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இந்திய அதிகாரிகள் நேற்றுத் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பேச்சுவார்த்தையில் உற்சாகமான முன்னேற்றநிலை நேற்றுக் காணப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-உ)

## இந்தியா கண்டனம்

புதுடில்லி, ஜூலை 5

ஈரான் விமானத்தை அமெரிக்கா சுட்டு வீழ்த்தியதை இந்திய அரசு பலமாகக் கண்டித்திருக்கின்றது.

அப்பாவி மக்களை அநியாயமாகக் கொன்றது மன்னிக்க முடியாத குற்றம் என்று இந்தியா தெரிவித்துள்ளது. (ஒ-எ)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா கைலாசபிள்ளை

பண்டாரவளை லியங்காவலை எஸ்டேட்டின் இளைப்பாறிய அப்போதிக்கரியும், தம்பிலிவில்லை வசிப்பிடமாகக் கொண்டவருமான கந்தையா கைலாசபிள்ளை காலமானார். அன்னார் ஓவசியர் கந்தையா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற இரத்தினவதியின் கணவரும் சீதாலக்ஷ்மி, சரோஜினி தேவி, கைலாசரட்ணம், காலஞ்சென்ற கமலாதேவி ஆகியோரின் தந்தையும் யோகநாதன், சந்தசாமி, விஸ்வநாதன் ஆகியோரின் மாமனும் குகவன், குதிகா, கார்த்திகா, தாமிரா, மயூரனி, மாதுமை, அனுஷகுமாரி ஆகியோரின் பேரனும் ஆவார். ஈமக்கிரியைகள் 06-07-88 புதன்கிழமை மாலை 3 மணியளவில் மேதர் ஒழுங்கை, மானிப்பாயில் நடைபெற்று பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்,
திருமதி: சீதாலக்ஷ்மி, யோகநாதன்
மேதர் ஒழுங்கை, மானிப்பாய்,
(5183)

### திருமதி இரத்தினம்மா செல்லத்துரை

காலம்சென்ற டாக்டர் செல்லத்துரையின் அன்பு மனைவியும், கணேசன்ராஜீ (Indonasia) நாகேந்திரன், லீலாமணி, ராதாமணி, மனோன்மணி, சாரதாமணி (அதிபர் சின்னம்மா வித்தியாசாலை, சங்கரத்தை), ரஞ்சிதமணி, ஷண்முகன் (Australia) நடேசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், பிரேமிலா, பாலேஸ்வரி, டாக்டர் ராசதுரை, ஜீவரட்ணம், கலாநிதி திருஞானசம்பந்தர், காலஞ்சென்ற மாணிக்கவாசகர், செல்வராஜா, திலககுமாரி, வசந்தரூபா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆகிய இரத்தினம்மா 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 6 ஆம் திகதி புதன்கிழமை (6-7-88) காலை 10. 30 மணியளவில் சங்கரத்தை வழுக்கையாறு மயானத்தில் நடைபெறும்.

"கணபதி வாசா"
சங்கரத்தை
வட்டுக்கோட்டை.

### மன்னார்....

போக்குவரத்தில் ஈடுபடவில்லை. அதிகமான கடைகள் மூடப்பட்டிருந்தன.

அன்று பிற்பகல் ஒரு மணியளவில் மன்னார் பஸ் நிலையத்தில் உள்ள இந்திய அமைதிப்படை முகாம் அதிகாரிகளிடம் பொதுமக்கள் மகஜர் ஒன்றை கையளித்தனர்.

சுலோக அட்டைகளுடன் காணப்பட்ட வாகனங்களையும், பஸ் நிலயத்தில் குழுமியிருந்த பொதுமக்களையும் உள்நாட்டு வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் படம் பிடித்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

இப் போராட்டத்தை பொது மக்களும், பொது நல அமைப்புகளும் ஒன்று சேர்ந்து ஒழுங்கு செய்திருந்தன. (ஒ-5)

### வவுனியாவில்...:

(1ம் பக்கத் தொடர்ச்சி)
டார்கள்.

''மக்கள் வங்கி, மக்களின்வங்கியா சர்வாதிகாரியா?'' 'எமது நகைகளை உடனே திருப்பிக்கொடு' என்பன போன்ற வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளை இவர்கள் வைத்திருந்தனர்.

அமைதிப் படையினரும், ஸ்ரீலங்காப் பொலிஸாரும் பாதுகாப்பு வழங்கினார்கள்.

ஊழியர்கள் எவரும் வங்கியினுள் செல்ல முடியாமல் தடுக்கப்பட்டதனால் வங்கி அலுவல்கள் ஸ்தம்பிதமடைந்தன. [ஒ-161]

### விடுதலைப்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
மானபங்கம், பயமுறுத்தல், கப்பம் கேட்டல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்கே இவர்களுக்கு இத்தண்டனை வழங்கப்பட்டதாகவும்—

இந்த ஐவரில் மூவர் தமது இயக்கத்தில் ஒரு மாத காலம் பயிற்சி பெற்று, பின்னர் விலகியவர்கள் எனவும், மற்ற இருவரும் பிற இயக்கங்கள் இரண்டைச் சேர்ந்தவர்கள் எனவும் — அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-164)

மாணவர்களே!!!

நில்லுங்கள்! சிந்தியுங்கள்!! செயற்படுங்கள்!!!

உங்கள் பிற்கால வாழ்க்கைக்குகந்த பயிற்சி நெறிகளில் சேர்ந்து பயில முந்துங்கள்! இன்றே புறப்படுங்கள்!!

DIPLOMA IN COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING BASIC LANGUAGE— 6 மாதங்கள்
(வார இறுதி வகுப்புகள்)

ஆரம்பம்: 09-07-1988 (சனி காலை 8.30 மணி)
கட்டணம்: ரூபா 1500/-
(மூன்று தவணைகளில் செலுத்தலாம்)

★ எமது குளிரூட்டப்பட்ட கொம்பியூட்டர் அறையில் அண்மையில் தருவிக்கப்பட்ட பல சிறப்பான நவீன கொம்பியூட்டர்களில் மாணவர்களுக்குத் தனித்தனியாக 60 மணித்தியாலங்களுக்குக் குறையாத செய்முறைப் பயிற்சியும் பயிற்சி முடிவில் சித்தியெய்தும் மாணவர்களுக்கு வெளிநாடுகளில் வேலைவாய்ப்புக்குகந்த தரமான சான்றிதழ்களும் வழங்கப்படும்.

★ வார நாள் வகுப்புகளும் அண்மையில் தான் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. இவ்வகுப்புகளிலும் இன்னும் சில தினங்களுக்கு மாத்திரம் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

AAT (SRI LANKA) Stage II
(வார இறுதி வகுப்புகள்)
ஆரம்பம்: 16-07-1988 (சனி காலை 9.00 மணி)
கட்டணம்: ரூபா 600/-
(இரு தவணைகளில் செலுத்தலாம்)

CIMA - Stage I, AAT (Sri Lanka) - Stage I, IAB
வகுப்புகளும் நடைபெறுகின்றன.
IAB - Final ஆரம்பம்: 15-07-1988 கிழமை நாட்கள்

★ தகைமை, திறமை, ஆற்றல், அனுபவம், கடமை, கண்ணியம் எல்லாம் ஒருங்கே அமைந்த போதனையில் சாதனை புரியும் விரிவுரையாளர்களைக் கொண்ட கணக்கியல் கொம்பியூட்டர் துறைகளில் தனித்துவம் வாய்ந்த ஒரே கல்வி நிறுவனம்

HARVARD INSTITUTE
SUCCESSORS OF
CANTABIA INSTITUTE
(PIONEERS IN COMPUTER EDUCATION)
No. 21, Main Street,
JAFFNA.
(C 5671)

யாழ். மக்களே!

Passport, Indian Visa, Travellers Cheque, Air Tickets
ஆகிய ஒழுங்குகளுக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்

✶ திருவனந்தபுரம், திருச்சி, Madras ஆகிய இடங்களுக்கு இந்திய விசாவுடன் உறுதிப்படுத்தப்பட்ட விமான ரிக்கற் ஒழுங்குகள் மிகவும் குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

✶ உலகில் எந்த நாட்டிற்கும் (India, Australia, Canada, America, Singapore, Bangkok மற்றும் நாடுகளுக்கும்) கொழும்பில் பெறும் கட்டணத்தில் யாழ்ப்பாணத்திலேயே ரிக்கற் வழங்கப்படும்.

✶ Confirmation, Reconfirmation, & Cancellation of Air Tickets செய்து கொடுக்கப்படும்.

✶ பாஸ்போட், பொண்டிங், Extension ஆகியவை துரிதமாக செய்து கொடுக்கப்படும்.

✶ உங்கள் வேண்டுகோளுக்கிணங்க ஐந்து ஆசனங்கள் கொண்ட Cessna 206 (5 Seater) விமானம் மீண்டும் இன்று தொடக்கம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. ஆசனங்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

MACK TRAVELS
8, First Lane, Point Pedro Road,
JAFFNA.
விமானசேவை
(C 5681)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் பிறைவேற் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2, இலக்கத்தில், உள்ள அவர்களது அச்சகத்தில் 06 - 07 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by New Uthayan Publication (Pvt) Ltd 292/2, Navalar Road, Jaffna on Wednesday 06 th July 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org